**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி.</u>**

**முன்னிலை:– திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.**

2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், சித்திரை மாதம் 08ம் நாள்

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் நாள் செவ்வாய் கிழமை

**<u>மேல்முறையீட்டு வழக்கு எண்.2/2025</u>**

**<u>CNR No.TNTV-14-000288-2024</u>**

எம்.கிருஷ்ணன்,
அரங்கரை தெரு,
ஆதிரெங்கம் கிராமம்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம். .......மேல்முறையீட்டாளர்/ வாதி

எதிராக

1. D.கணேசன்,
   த/பெ.தட்சிணாமூர்த்தி,
   அரங்கரை தெரு,
   ஆதிரெங்கம் கிராமம்,
   திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
   திருவாரூர் மாவட்டம்.
2. K. ரவிசந்திரன்,
   த/பெ.கல்யாணசுந்தரம்
   அரங்கரை தெரு,
   ஆதிரெங்கம் கிராமம்,
   திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
   திருவாரூர் மாவட்டம்.
3. P. பூபதி,
   த/பெ.பெருமாள்,

அரங்கரை தெரு,
ஆதிரெங்கம் கிராமம்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

4. C. நாகவள்ளி,
க/பெ.சோழவேந்தன்,
அரங்கரை தெரு,
ஆதிரெங்கம் கிராமம்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

5. ரங்கநாத பெருமாள் கோவில்,
ஆதிரெங்கம்,
அதற்காக அதன் செயல் அலுவலர்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

6. உதவி ஆணையர், (தன்னார்)
இந்து மத தொண்டு நிறுவனங்கள், .....எதிர்மேல்முறையீட்டாளர்கள்/
திருவாரூர். பிரதிவாதிகள்

இந்த மேல்முறையீடானது திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.52/2019-ல் கடந்த 29.03.2024-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து வாதியால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>விசாரணை நீதிமன்ற தரப்பினர்கள்</u>:**

எம்.கிருஷ்ணன்,
அரங்கரை தெரு,
ஆதிரெங்கம் கிராமம்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா, .......வாதி
திருவாரூர் மாவட்டம்.

**எதிராக**

1. D.கணேசன்,
த/பெ.தட்சிணாமூர்த்தி,
அரங்கரை தெரு,
ஆதிரெங்கம் கிராமம்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

2. K. ரவிசந்திரன்,
த/பெ.கல்யாணசுந்தரம்
அரங்கரை தெரு,
ஆதிரெங்கம் கிராமம்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

3. P. பூபதி,
த/பெ.பெருமாள்,
அரங்கரை தெரு,
ஆதிரெங்கம் கிராமம்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

4. C. நாகவள்ளி,
க/பெ.சோழவேந்தன்,
அரங்கரை தெரு,
ஆதிரெங்கம் கிராமம்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

5. ரங்கநாத பெருமாள் கோவில்,
ஆதிரெங்கம்,
அதற்காக அதன் செயல் அலுவலர்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

6. உதவி ஆணையர், (தன்னார்)
இந்து மத தொண்டு நிறுவனங்கள், ..... பிரதிவாதிகள்
திருவாரூர்.

இம்மேல்முறையீடு இந்நீதிமன்றத்தின் முன்பு 16.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில் இடை மனு எண்.2/2026 மனு உத்தரவின் பேரில் அனுமதி அளித்து மேல்முறையீட்டாளர்/வாதியே தன்னிச்சையாக வாதுரைகளை மேற்கொண்டும், 1 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் எஸ்.பி.பாஸ்கர், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 5 மற்றும் 6ம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் எஸ்.பி.பாஸ்கர், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்து இம்மேல்முறையீட்டில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்........

**<u>தீர்ப்புரை</u>**

மேல்முறையீட்டை அனுமதிக்க கோரியும், திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.52/2019-ல் கடந்த 29.03.2024-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கரவு செய்து மேல்முறையீட்டை அனுமதிக்க கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் இம்மேல்முறையீடு தாக்கல்.

**2) <u>விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்</u>:**

வாதி மேற்கண்ட முகவரியில் நிரந்தரமாக வசித்து வருகிறார் என்றும், வாதி ஒரு சமூக ஆர்வலர் ஆவார் என்றும், எவ்விதமான பிரதிபலன்களையும்

எதிர்பார்க்காமல் திருவாரூர் மாவட்டம் முழுவதும், மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றார்.

ii. திருத்துறைப்பூண்டி தாலுக்கா, ஆதிரெங்கம் கிராமத்தில் 5ம் பிரதிவாதியின் ஆலயத்துக்கு சொந்தமான புல எண்:44/7ல் 48 ஏர்ஸில் 33 சென்ட் நஞ்சை நிலமானது வாதியின் தாயார் கோவிந்தம்மாள் பகுதி பாத்திய அனுபவத்தில் இருந்து வந்த நிலையில் அவருடைய மறைவிற்கு பின்னர் வாதியின் வெளிப்படையான தொடர்ச்சியான அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், இச்சொத்திற்கு வடபுறத்தில் புல எண்:44/19ல் 0.03.79 ஏர்ஸ் புஞ்சை மனைக்கட்டானது புல எண்:44/7 சொத்தோடு சேர்ந்தனையாக இருந்து வருகிறது என்றும், இரண்டு புல எண்களும் தற்பொழுது ஒரே பூஸ்தியில் வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், மேற்படி புல எண்:44/19 0.03.79 ஏர்ஸ் புஞ்சை மனைகட்டு வகைபாட்டில் இருந்தாலும் அது புல எண்:44/7 வயலோடு சேர்ந்தணையாக வயலாகவே ஒரே பூஸ்தியில் வாதியால் விவசாயம் செய்யப்பட்டு அனுபவம் செய்யப்பட்டு வருகிறது என்றும், இந்த சொத்து தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்துக்கள் பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எவ்வித சம்மந்தமும், உரிமையும் கிடையாது என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்துக்கு வடக்கிழக்கு திசையில் வீடு கட்டி வசித்து வருகின்றார்கள் என்றும், ஆற்றங்கரையில் இருந்து 1 முதல் 4 பிரதிவாதிகளின் வீடுகளுக்கு செல்வதற்கு ஏற்கனவே ஆதிரெங்கம் கிராம புல எண்.44/18ல் 0.01.28 ஏர்ஸ் அரசு புறம்போக்கு நிலமானது சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக பாதையாக பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் அச்சாலையினை முற்றிலும் மேற்படி பிரதிவாதிகள் ஆக்கிரமித்து தற்பொழுது சட்டத்திற்கு விரோதமாக வாதியின் அனுபவத்தில்

இருந்து வரும் புல எண்.44/7 மற்றும் புல எண்.44/19 சொத்தின் வடக்கு புற பகுதியினை ஆக்கிரமிக்கும் நோக்கத்தில் செயல்பட்டு வருகின்றார்கள்.

iii. வாதி தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்த நிலையில் ஆடு, மாடு மற்றும் விலங்குகள் தொந்தரவுகளில் இருந்து பயிர்களை பாதுகாப்பதற்காக தாவா சொத்துக்கள் முழுவதும் கருங்கல் தூண்களுடன் கம்பி வேலி வைத்து பாதுகாத்து வந்தார் என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகள் அத்துமீறி வாதியின் வடக்குற எல்லையினை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்து கடந்த 21/01/2019 அன்று வாதியின் வடக்குபுற வேலியினை உடைத்து சேதப்படுத்தி இரண்டு அடி அகலமுள்ள வரப்பினை தூற்று சாலை அமைப்பதற்கு முயற்சி செய்தார்கள் என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகளின் அடாவடித்தனமான அத்துமீறலை வாதி வயதானவர் என்பதால் தடுத்து நிறுத்த முடியவில்லை என்றும், வாதியையும், அவரது குடும்பத்தினரையும் அச்சுறுத்தி மேற்படி புல எண்:44/7 மற்றும் 44/19ன் வடபகுதியில் சுமார் 5 அடி அகலத்திற்கு தூர்த்து 64 அடி நீளத்திற்கும் தூர்த்து விட்டனர் என்றும், இது தொடர்பாக வாதியால் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு காவல் நிலையத்தினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகளின் அத்துமீறிய சட்டவிரோதமான செயல்கள் தொடர்பாக 5வது பிரதிவாதியிடம் வாதி எழுத்துப்பூர்வமாகவும், நேரடியாகவும் புகார் தெரிவித்தும், 5வது பிரதிவாதியும் அவரது அலுவலகத்தை சேர்ந்தவர்களும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் அத்து மீறிய செயலை தடுக்கவோ, சட்டப்படி நடவடிக்கை எடுக்கவோ இல்லை என்றும், இவ்வழக்கில் 5ம் பிரதிவாதி தாவா சொத்தின் உரிமையாளர் என்பதாலும், 6ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதியின் மேல் அதிகாரி என்பதாலும், அவசிய தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

iv. 1 முதல் 4 பிரதிவாதிகளின் சட்டவிரோத அத்துமீறல் தொடர்பாக 5ம் பிரதிவாதியும், காவல்துறையினரும் நடவடிக்கை எடுக்காததை அனுகூலமாக கொண்டு மேலும் வாதியின் அனுபவத்தில் உள்ள புல எண்:44/7ல் வடபகுதியினை மேலும் தூர்த்து 1 முதல் 4 பிரதிவாதிகளின் வீடுகளுக்கு சாலை அமைக்க போவதாக வெளிப்படையாக வாதியை மிரட்டி வருகின்றார்கள் என்றும், இது தொடர்பாக 5வது பிரதிவாதி அலுவலகத்தாரும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வாதியை அலைகழித்து வருகின்றார்கள்.

v. 1 முதல் 4 பிரதிவாதிகள் வீடுகளுக்கு செல்வதற்கு இருந்த பொது பாதையினை ஆக்கிரமணம் செய்துள்ளதோடு மட்டுமின்றி தற்பொழுது திட்டமிட்டு உள்நோக்கத்தோடு, வாதியின் அனுபவத்தில் உள்ள புல எண்: 44/7 மற்றும் 44/19 வடபகுதியினையும் ஆக்கிரமிப்பு செய்து சாலை அமைப்பதற்கு முயற்சி செய்து வருகின்றார்கள் என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகளின் நடவடிக்கைகளால் வாதி மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளார் என்றும், சுமார் 10,000/-ம் மதிப்பு உள்ள வேலியையும் அடித்து உடைத்து சேதப்படுத்தி உள்ளார்கள் என்றும், சட்டத்திற்கு விரோதமாக அரசு மற்றும் கோவில் சொத்துக்களை ஆக்கிரமணம் செய்வதையே 1 மற்றும் 4 பிரதிவாதிகள் வாடிக்கையாக கொண்டுள்ள நிலையில் அது தொடர்பாக 5 மற்றும் 6 பிரதிவாதிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வருவதால் பிரதிவாதிகள், வாதியின் அனுபவ சொத்தினை தூர்க்கவும் முயற்சி செய்து வருகின்றார்கள்.

vi. கடந்த 21.01.2019 அன்று 1 முதல் 4 பிரதிவாதிகள் அத்துமீறி செயல்பட்டு தாவா சொத்தில் உள்ள வரப்பினையும் அதனை சுற்றி வாதியால் அமைக்கப்பட்டிருந்த கருங்கள் கம்பி வேலியையும் உடைத்து சேதப்படுத்தியது

தொடர்பாக திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் 21.01.2019 மனு ஏற்பு சான்று வழங்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், வாதி கடந்த 02.03.2019 அன்று 1 முதல் 4 பிரதிவாதிகளின் அத்து மீறல்கள் குறித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், அறிவிப்பினைப் பெற்றுக்கொண்டு மீண்டும் மீண்டும் வாதிக்கு தொந்தரவு செய்யும் நோக்கத்தில் செயல் பட்டு வருகின்றார்கள் என்றும், இந்நிலையில் வாதி கடந்த 18.06.2019 அன்று விவசாயம் செய்வதற்கான மராமத்து பணிகளை செய்துகொண்டிருந்தது போது 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அவரது ஆட்களுடன் அத்துமீறி தாவா சொத்தினில் நுழைந்து வாதியை வேலை செய்ய முடியாமல் பிரச்சனை செய்துள்ளார்கள்.

Vii. மேலும், வாதி 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அவரது ஆட்களின் சட்டவிரோதமான நடவடிக்கையினை அக்கம் பக்கத்தவர்கள் மூலம் தடுத்து நிறுத்திவிட்டார் என்றும், ஆனால் 1 முதல் 4 பிரதிவாதிகள் எப்படியும் தாவா சொத்தினை அபகரிக்காமல் விடமாட்டோம் என்று சாவல்விட்டு சென்றுள்ளார் என்றும், மேற்படி பிரச்சனை சம்மந்தமாக வாதி அன்றைய தினமே திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், புகாரினை பெற்றுக்கொண்ட காவல்நிலையத்தினர் பிரச்சனை நிலம் சம்மந்தப்பட்டது என்பதால் நீதிமன்றத்தின் மூலம் தீர்த்து கொள்ளும்படி கூறி நடவடிக்கை எடுக்கவில்லை.

viii) 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆட்பலம் மற்றும் அரசியல் பலம் மிக்க நபர் ஆவார்கள் என்றும், எந்த நேரத்திலும் பிரதிவாதியானவர் தாவா சொத்தில் அத்துமீறி பிரவேசித்து ஆக்கிரமனம் செய்ய முயற்சி செய்வார் என வாதி அச்சத்துடன் இருந்து வருகின்றார் என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகளின் அத்துமீறிய செயலினை மேன்மைமிகு நீதிமன்றத்தின் உத்தரவினால் மட்டுமே

தடுத்து நிறுத்த முடியும் என்றும், எனவே வாதிகளால் மேன்மைமிகு நீதிமன்றத்தில் தாவா சொத்திற்கு 1 முதல் 4 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ சட்டத்திற்கு விரோதமாக எந்தவிதமான ஆக்கிரமிப்பும், அத்துமீறலும் செய்யகூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிட கோரியும், தாவா சொத்தில் இருந்த கருங்கல் கம்பி வேலியை சேதப்படுத்திய வகையில் ஏற்பட்ட இழப்பு ரூ.10,000/- மற்றும் அதனை சரி செய்ய ஏற்படும் செலவு ரூ15,000/- ஆக கூடுதல் ரூ.25,000/-ஐ வாதிக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் இழப்பினை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், 5 மற்றும் 6ம் பிரதிவாதிகள் தாவா சொத்தின் உரிமையாளர்கள் என்பதால் அவசிய தரப்பாராக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும், அவர்களுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரப்படவில்லை என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) <u>விசாரணை நீதிமன்றத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைபட்டவர் ஆவார் என்றும், வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை சங்கதிகளில் இதனடியில் இந்த பிரதிவாதிகளால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற வழக்குரை சங்கதிகளை இந்த பிரதிவாதிகள் மறுக்கின்றனர் என்றும், வாதியின் வழக்குரை சங்கதிகளை வாதியே சந்தேகமற நிரூபிக்க கடமைபட்டவர் ஆவார்.

ii. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை 1 முதல் 7 பாராக்களில் கண்டுள்ள சங்கதிகள் முற்றிலும் தவறானதாகும் என்றும், வாதி தனது சுயலாபத்திற்காகவும், சுய விளம்பரத்திற்காகவும், தன்னை தானே சமூக ஆர்வலர் என கூறிக்கொள்கிறார் என்றும், தாவா சொத்தானது சமூகம் நீதிமன்ற

எல்லைக்குட்பட்ட ஆதிரெங்கம் கிராமத்தில்உ ள்ள புல எண்.44/7–ல் 48 ஏர்ஸ் 33 செண்ட் நஞ்சை நிலமானது 5ம் பிரதிவாதி நிர்வாகத்தில் உள்ள அ/மி.ரெங்கநாத பெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமானது என்பது உண்மை என்றும், மேற்படி சொத்தானது வாதியின் தனிப்பட்ட அனுபவத்தில் உள்ளது என்பதனை வாதியே நிரூபிக்க கடைபட்டவர் ஆவார்.

iii) மேற்படி 44/7ல் வடக்கு புறம் 44/19ல் 0.03.79 ஏர்ஸ் புஞ்சை சொத்து இருந்து வருவது உண்மை என்றும், அவை புல எண்.44/7 சொத்துடன் சேர்ந்தரணையாக வயலாக ஒரு பூஸ்தியில் வாதியால் விவசாயம் செய்யப்பட்டு, அனுபவம் செய்யப்பட்டு வருவதாக சொல்லியிருப்பது முற்றிலும் தவறான சங்கதியாகும் என்றும், தாவா சொத்தில் புல எண்.44/19 என்பது அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலமாகும். மேற்படி சொத்தினை மேற்படி வாதியின் அனுபவத்தில் இருப்பதாக கூறும் ஆதிரெங்கம் அ/மி.ரெங்கநாத பெருமாள் கோவிலுக்கு சொந்தமான சொத்தினை அனுபவம் செய்துவருவதை அனுகூலமாக பயன்படுத்திக்கொண்டு மேற்படி புல எண்.44/19 ஒரு பகுதியை சிறுக சிறுக வெட்டி எடுத்து வாதி ஆக்ரமித்து வருகிறார் என்றும், உண்மையில் மேற்படி பிரதிவாதிகள் மட்டும் அல்லாமல் மேற்படி பிரதிவாதிகள் வசிக்கும் தெருவில் உள்ள 15க்கும் மேற்பட்ட நபர்கள் தங்களுக்கு சொந்தமான இடத்தில் வீடுகட்டி வசித்து வருகின்றனர் என்றும், அவர்களுக்கு மேற்படி புலஎண்.44/18 மற்றும் புலஎண் 44/19ன் வழியாகத்தான் மேற்படி பிரதிவாதிகள் மற்றும் தெருவில் வசிக்கும் மற்ற நபர்கள் வீட்டுக்கும் அந்த பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு சென்று வரும் பாதையாகவும், சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது என்றும், அதனை மறைத்து தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி புல எண் 44/19ல் உள்ள அரசுக்கு சொந்தமான சொத்தினை வாதிக்கு எந்தவிதமான அனுபவமும் இல்லாமல் வாதி

மோசடியாக அடைந்து விடவேண்டும் என்பதற்காக சமூகம் நீதின்றத்தில் பொய்யான சங்கதிகளை சொல்லி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதன் மூலம் பிரதிவாதிகளுக்கு எதிராக உத்தரவு பெற்று எப்படியாவது தாவா 2வது அயிட்ட சொத்தினை அடைந்து விடவேண்டும் என்பதற்காகவே இந்த வழக்கினை மோசடியாக தாக்கல் செய்துள்ளார்.

iv) தாவா வழக்கில் உள்ள புல எண்.44/19 என்பது அரசுக்கு சொந்தமான நத்தம் வகைப்பாட்டை சேர்ந்தது என்ற நிலையில் அதனை தாவா சொத்தினை 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆக்ரமிக்க முயற்சி செய்வதாக கூறிவிட்டு 5ம் பிரதிவாதியை தரப்பராக சேர்த்திருப்பது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்றும், மேலும் தாவா சொத்துக்கு அருகில் புல எண்.44/18ல் உள்ள பொதுபாதையை இந்த 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆக்ரமித்துள்ளதாக கூறுவது தவறு என்றும், உண்மையில் மேற்படி வாதியே மேற்படி பிரதிவாதிகள் மற்றும் அருகில் வசிக்கும் நபர்கள் செல்லும் பாதையை வெட்டி எடுத்து அதில் உள்ள மணலை விற்று அந்த பகுதியை ஆக்ரமிக்க முயற்சி செய்து வருகிறார் என்றும், வாதிக்கும் தாவா சொத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமோ, அனுபவமோ, உரிமையோ கிடையாது என்றும், வேண்டுமென்றே பிரதிவாதிகள் மற்றும் பிரதிவாதிகள் வசிக்கும் தெருவில் உள்ள மக்கள் வசிக்கும் வீட்டிற்கும் விவசாயிகள் விவசாய நிலத்திற்கு செல்லும் நபர்களுக்கும் இடையூறு செய்யவேண்டும் என்பதாலே பொய்யான வழக்குமூலத்தினை கூறி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

v) தாவா புல எண்.44/19 சொத்தின் வட பகுதியை தூர்த்துவிட்டதாகவும், தாவா சொத்தின் வடக்கு புற வேலியை உடைத்து சேதப்படுத்திவிட்டதாக கூறுவது முற்றிலும் தவறு என்றும், இந்த 1 முதல் 4 பிரதிவாதிகள்

எக்காலத்திலும் அவ்வாறு செய்யவில்லை என்றும், மேலும் தாவா வழக்கு சம்மந்தமாக காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டு பிரச்சனை நில சம்மந்தமானது என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது முற்றிலும் தவறானதாகும். உண்மையில் புகார் என்பதே பொய்யானது என்றும், மேற்படி வாதி கொடுத்த புகாரை சம்பவ இடம் வந்து விசாரணை செய்த காவல் துறையினர் பாதையை வெட்டி எடுத்து வாதியே ஆக்ரமித்துள்ளார் என்பதனை காவல் துறையினர் அறிந்து வாதியை கண்டித்து விட்டு சென்றனர் என்றும், மேற்படி உண்மைகளை மறைத்து வாதி மோசடியாக தாவா சொத்தினை அடைய வேண்டும் என்பதற்காகவும், காவல்துறையினரிடம் தான் ஒரு சமூக சேவகர் என்று கூறி அதன் மூலம் எப்படியாவது வேலி அமைத்து தாவா 2வது அயிட்ட சொத்தான புல எண்.44/19ல் உள்ள அரசுக்கு சொந்தமான சொத்தினை அடைந்துவிடவேண்டும் என்பதற்காகவே மேற்படி காவல்துறை மூலம் நடவடிக்கை எடுத்து மேற்படி சொத்தினை அடைய முயற்சி செய்தார் என்றும், அதற்கு காவல்துறை மூலம் சொத்தை அடைய முடியாததால், சமூகம் நீதிமன்றத்தின் மூலம் பொய்யான காரணங்களை கூறி வழக்கு தாக்கல் செய்து புலஎண்.44/19 உள்ள சொத்தினை அடைந்தும், மேற்படி 1முதல் 4 பிரதிவாதிகளை மிரட்டி அவர்களிடமிருந்து நஷ்டஈடு என்ற பேரில் பணம் பறித்தும், தாவா இடத்தினை அடைந்துவிடலாம் என்பதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா வழக்கில் வாதி கூறியுள்ளது போல் 1 முதல் 4 பிரதிவாதிகள் வாதிக்கு சொந்தமான எந்த பொருள்களையும் சேதப்படுத்தவில்லை என்றும், அவ்வாறு எந்த செயலிலும் இந்த 1 முதல் 4 பிரதிவாதிகள் ஈடுபடவில்லை என்றும், அதனால் ரூ.25,000/- நஷ்ட ஈட்டு தொகையை வாதிக்கு கொடுக்க கடமைபட்டவர்கள் அல்ல என்றும், தாவா வழக்கு என்பது தள்ளுபடி செய்ய வேண்டிய வழக்காகும்.

vi) மேலும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது குறித்து கேட்டதற்கு, இந்த 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அந்த தெருவில் வசிக்கும் நபர்களிடமிருந்து சாலை அமைப்பதற்காக வாங்கிய பணத்தினை ஒரு சிலர் திரும்ப கேட்டதால், கோபத்தில் அறிவிப்பு அனுப்பிவிட்டதாக கூறியதாக பதில் அறிவிப்பு அனுப்ப வேண்டாம் எனக்கூறிவிட்டு தற்போது வழக்கு தாக்கல் செய்திருப்பது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், இந்த 1 முதல் 4 பிரதிவாதிகள் செல்லும் பாதையை அரசு மூலம் சிமெண்ட் சாலை அமைத்து தருவதாக கூறி பிரதிவாதிகள் மற்றும் அருகில் வசிக்கும் வீட்டில் உள்ளவர்களிடம் பணம் வசூல் செய்து எந்தவிதமான சாலையும் அமைக்க ஏற்பாடு செய்து கொடுக்காமல், வாதி இருந்த காரணத்தினால் இந்த பிரதிவாதிகள் அது குறித்து கேட்டதற்கு, பிரதிவாதிகள் மீது வன்மம் கொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மேலும் மேற்படி பிரதிவாதிகள் மற்றும் தெருவில் வசிப்பவர்கள் மற்றும் விவசாயிகள் சேர்ந்து அரசு மூலம் சாலை அமைக்க முயற்சி செய்தபோதும் மேற்படி வாதி, எப்படியாவது தாவா சொத்தினை அடையவேண்டும் என்பதற்காக சாலை அமைப்பதற்கு இடையூறு செய்து சாலை அமைக்காமல் செய்துவிட்டால் தாவா 2வது அயிட்ட சொத்தினை முழுவதுமாக அடைந்துவிடலாம் என்ற நோக்கில் இந்த 1 முதல் 4 பிரதிவாதிகளை மட்டும் தரப்பாராக சேர்த்து மோசடியாக வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் உத்தரவு பெற்று தாவா சொத்தினை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்திற்கும், வாதிக்கும் எந்தவிதமான சம்மந்தமோ, உரிமையோ, அனுபவமே கிடையாது என்றும், மேலும் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் கடந்த 21.01.2019ந் தேதியிலும், 02.03.2019ம் தேதியிலும் 18.06.2019ம் தேதியிலும் மேற்படி 1 முதல் 4 பிரதிவாதிகள் அத்துமீறி செயல்பட்டதாகவும், சேதப்படுத்தியதாகவும் பிரச்சனை செய்ததாக கூறுவதும், உண்மைக்கு மாறான சங்கதிகள் ஆகும். மேலும் இந்த 1 முதல் 4 பிரதிவாதிகள்

மிகவும் ஏழ்மையான குடும்பத்தினை சேர்ந்த தினக்கூலி விவசாயிகள் ஆவார்கள் என்றும், வாதி சொல்லியுள்ளது போல் பணபலம் மற்றும் அரசியல் பலம் அற்றவர்கள் என்றும், மாறாக வாதியே அதிகார பலம் படைத்த நபர் ஆவார் என்றும், தாவா வழக்கு மூலம் என்பதும், சொத்து விபரமும், நான்கெல்லை விபரமும் தவறானதாகும் என்றும், தாவா வழக்கில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் என்பதும் சரியானதல்ல என்றும், வாதி கோரும் பரிகாரம் என்பதும் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், எனவே, தாவா வழக்கினை பிரதிவாதிகள் தரப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி 1 முதல் 4 பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**4) <u>விசாரணை நீதிமன்றத்தில் வனையப்பட்ட எழுவினாக்கள்</u>:**

| | |
|---|---|
| 1. | தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் வாதி உள்ளாரா ? |
| 2. | வாதி வழக்குரையில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதுதானா ? |
| 3. | வாதி கோரியுள்ள இழப்பீடு பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதுதானா ? |
| 3. | இதர பரிகாரம் என்ன ? |

**5) <u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:**

அசல் வழக்கில் **கிருஷ்ணன் – வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டும், **வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.10** சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் கணேசன் – **பி.சா.1** ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் **பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.22** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) <u>**விசாரணை நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்வு**</u>:

வாதியின் அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ள தாவா சொத்துகளில் 1 முதல் 4 பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, முகவர்களோ சட்டத்திற்கு விரோதமாக எந்த விதமான ஆக்ரமிப்பு, அத்துமீறல் போன்ற எந்தவிதமான இடையூறான செயல்களையும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் தாவா சொத்திலிருந்த வேலியை அகற்றியதற்காக இழப்பீடு ரூ.25,000/- வழங்க கோரியும் தாக்கல் செய்த அசல் வழக்கில் தாவா 1வது இனச்சொத்தை பொறுத்து வாதிக்கு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா 2ம் இனச்சொத்து மற்றும் இழப்பீடு குறித்த பரிகாரங்களை பொறுத்து தள்ளுபடி செய்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**7)** <u>**மேல்முறையீட்டிற்கான காரணங்களின் சுருக்கம்**</u>:

i) விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டத்திற்கும், வழக்கின் சங்கதிகளுக்கும் எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், விசாரணை நீதிமன்றம் சாட்சியங்களை கருத்தில் எடுத்துக் கொள்ளாமல் தவறாக தீர்ப்பு பிறப்பித்துள்ளது என்றும், விசாரணை நீதிமன்றம், புல எண்கள்.44/7 மற்றும் 44/19 இல் உள்ள வழக்குச் சொத்துக்களின் உடைமையை உறுதிப்படுத்தும் நிர்வாக அதிகாரியின் உடைமைச் சான்றிதழான வா.சா.ஆ.10-ஐ கவனிக்காமல் தீர்ப்பு வழங்கியுள்ளது சரியானதல்ல என்றும், விசாரணை நீதிமன்றம் வா.சா.ஆ.10-ஐ நிராகரித்திருக்கக் கூடாது என்றும், ஏனெனில் அது ஒரு பொது ஆவணம் ஆகும்.

ii) விசாரணை நீதிமன்றம், வாதியின் தாயாருக்கு வழங்கப்பட்ட அசல் குத்தகை ரசீதான வா.சா.ஆ.1-ஐ கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது என்றும், அந்த ரசீது வாதியால் வழக்குச் சொத்துக்கள் நீண்ட காலமாக உடைமையில்

வைக்கப்பட்டிருந்ததை நிரூபிக்கிறது என்றும், சர்வே எண்கள்.44/7 மற்றும் 44/19 ஆகிய இரண்டுமே வாதியின் உடைமையிலும், அனுபவத்திலும் இருப்பதால் விசாரணை நீதிமன்றம் வாதிக்கு ஆதரவாக தான் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கியிருக்க வேண்டும்.

iii) சொத்தின் மீது உரிமைப் பத்திரம் இல்லாத 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி நிரந்தரத் தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியதை விசாரணை நீதிமன்றம் கவனித்திருக்க வேண்டும் என்றும், வாதி அரசாங்கத்திற்கு எதிராக எந்தத் தடை உத்தரவையும் கோரவில்லை என்றும், வாதி வழக்குச் சொத்தின் மீது எந்த உரிமையையும் கோரவில்லை என்பதையும், சர்வே எண்.44/19-இல் வழக்குச் சொத்தை ஆக்கிரமித்துள்ள தனியார் நபர்களான 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தரத் தடை உத்தரவை மட்டுமே கோரியுள்ளார் என்பதையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது.

vi) 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளால் வேலியின் வடக்குப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட சேதத்திற்காக வாதியால் கோரப்பட்ட ரூ.25,000/-க்கும் அதிகமான சேதத்தொகையை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது என்றும், எனவே, மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் பதிவேட்டில் உள்ள அசல் வழக்கு எண்.52/2019 வழக்கில், 29.03.2024 தேதியிட்டு வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்து இந்த மேல்முறையீட்டு வழக்கை அனுமதிக்க வேண்டுமென கோரியுள்ளார்.

8) <u>மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சனைகள்</u>:

| | |
|---|---|
| 1) | தாவா சொத்துகள் வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும், சாகுபடியிலும் இருந்து வருவதையும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் இடையூறு செய்துள்ளதையும், சேதம் ஏற்படுத்தியுள்ளதையும் வாதி மெய்பித்துள்ளரா ? |
| 2) | விசாரணை நீதிமன்றம் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை முறையாக பரிசீலனை செய்து வழக்கினை தீர்மானம் செய்துள்ளதா? அல்லது இந்த மேல்முறையீட்டின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையீடு அவசியமா? இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா? |

9) <u>பிரச்சனை 1 மற்றும் 2–ற்கான தீர்வு</u>:

I) தாவா சொத்துக்களை பொறுத்து வாதியால், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, முகவர்களோ சட்டத்திற்கு விரோதமாக எந்தவிதமான ஆக்கிரமிப்பு, அத்துமீறல் போன்ற எவ்விதமான இடையூறான செயல்களையும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் தாவா சொத்திலிருந்த வேலியை அகற்றி சேதப்படுத்தியதற்காக இழப்பீடாக ரூ.25,000/– வழங்க கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதை எதிர்த்து 1 முதல் 4 பிரதிவாதிகள் கட்சியாடி வந்து முழு விசாரணைக்கு பிறகு தாவா 1ம் இனச்சொத்து மட்டும் வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதை நிரூப்பிக்கப்பட்டுள்ளதால் தாவா 1ம் இனச்சொத்திற்கு மட்டும் நிரந்தர உறுத்துக் கட்டளை பிரதிவாதிகளுக்கு எதிராக வழங்கியும், தாவா 2ம் இனச்சொத்தை பொறுத்து வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதை நிரூபிக்கப்படாத நிலையில் தாவா 2ம் இனச்சொத்தை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதை எதிர்த்து வாதியால் இந்த மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) இந்த மேல்முறையீட்டின் சுருக்கம், தெளிவு மற்றும் வசதிக்காக தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் அழைக்கபட்டவாறே வாதி, பிரதிவாதிகள் என அழைக்கப்படுவார்கள்.

10) <u>மேல்முறையீட்டாளர்/வாதி தன்னிச்சையாக வாதுரைக்கப்பட்ட வாதுரையின் சுருக்கம்</u>:

விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டத்திற்கு விரோதமானது என்றும், வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியங்களையும் மற்றும் ஆவண சாட்சிகளையும் சரிவரி பரிசீலனை செய்யாமல் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றும், வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட வா.சா.ஆ.10 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்களான 1, 2 இனச்சொத்துகள் வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதை செயல் அலுவலர் சான்றிதழ் வழங்கியுள்ளதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது என்றும், வா.சா.ஆ.10 ஆவணத்தின்படி தாவா 1, 2 இனச் சொத்துக்களை வாதி தான் சாகுபடி செய்து வருவதும், தாவா சொத்துக்களானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவது நிரூபிக்கப்பட்டுள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது என்றும், வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியத்திலிருந்தும், ஆவண சாட்சியத்திலிருந்தும் தாவா சொத்துக்களில் 1ம் இனச்சொத்து மட்டும் வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும், சாகுபடியிலும் இருந்து வருவது நிரூபிக்கப்பட்டுள்ளதால் தாவா 1ம் இனச்சொத்து மட்டும் வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கியுள்ளது தவறு என்றும், தாவா 2ம் இனச்சொத்தும் வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து வாதி, 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டுமே

நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித மூல ஆவணங்களும், உரிமைகளும் கிடையாது என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து அரசுக்கு எதிராக எவ்வித பரிகாரங்களும் கோரபடவில்லை என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து வாதியால், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரப்பட்டுள்ளது என்றும், சொத்தின் உரிமை குறித்து எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றும், வாதியின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை சுற்றி வாதியால் வடப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த கருங்கல் கம்பி வேலியை உடைத்து ரூ.25,000/- சேதம் ஏற்படுத்தியுள்ளதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது என்றும், வாதிக்கு எவ்வித இழப்பீடு தொகையும் வழங்கவில்லை என்றும், எனவே விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து, இந்த மேல்முறையீட்டு வழக்கை அனுமதிக்க வேண்டுமென என வாதுரைக்கப்பட்டார்.

**11) <u>எதிர்மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின் சுருக்கம்</u>:**

தாவா 1ம் இனச்சொத்தானது திருத்துறைப்பூண்டி தாலுக்கா, ஆதிரெங்கம் கிராமத்தில் உள்ள அருள்மிகு.ரங்கநாத பெருமாள் கோவிலுக்கு சொந்தமான சொத்து என்றும், அந்த சொத்தை வாதியின் தாயாரான கோவிந்தம்மாள் பகுதி பாத்திய அனுபவத்தில் இருந்து வந்து பகுதி தொகை செலுத்தி வந்தார் என்றும், பின்னர் வாதியின் தாயார் கோவிந்தம்மாள் ஆயுளுக்கு பிறகு தாவா 1ம் இனச்சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவது வாதி தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியத்திலிருந்தும், ஆவண சாட்சியத்திலிருந்தும் நிரூபிக்கப்பட்டுள்ளது சரிதான் என்றும், தாவா 2ம் இனச்சொத்தானது அரசுக்கு சொந்தமான

புறம்போக்கு சொத்து என்றும், 2ம் இனச்சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதை நிரூபிக்கும்பொருட்டு வாதி தரப்பில் எவ்வித சாட்சிகளையும், ஆவணங்களையும் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்பதால் விசாரணை நீதிமன்றம் தாவா 2ம் இனச் சொத்தை பொறுத்தும், இழப்பீட்டு தொகை பொறுத்தும் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது சரிதான் என்றும், தாவா 2ம் இனச்சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும், சாகுபடியிலும் இருந்து வருவதை நிரூபிக்கும்பொருட்டு எவ்வித வருவாய் துறை ஆவணங்களான அடங்கல் எதுவும் தாக்கல் செய்யததால் தாவா 2ம் இனச்சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இல்லை என்பதும், தாவா 2ம் இனச்சொத்தானது அரசுக்கு சொந்தமான சொத்து என்பதால் வாதியால் அரசை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த மேல்முறையீட்டு வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றும், தாவா 2ம் இனச்சொத்தை பொறுத்து வாதிக்கு எவ்வித பரிகாரங்கள் வழங்காமல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது சரிதான் என வாதுரைக்கப்பட்டது.

ii) மேலும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளால் வரப்பினையும், அதை சுற்றி வாதியால் அமைக்கப்பட்டிருந்த கருங்கல் கம்பி வேலியையும் உடைத்து சேதம் ஏற்படுத்தியது தொடர்பாக வாதி தரப்பில் எவ்வித சாட்சியமும், சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தாததாலும், வாதி தரப்பில் நிரூபிக்கப்படாததாலும் வாதிக்கு எவ்வித நஷ்ட ஈட்டு தொகையும் கிடையாது என விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது சரிதான் என்றும், தாவா 2ம் இனச்சொத்தானது அரசுக்கு சொந்தமான சொத்து என வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், அரசுக்கு சொந்தமான தாவா 2ம்

இனச் சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதை நிரூபிக்கவில்லை என்றும், அதனால் 2ம் இனச்சொத்தை பொறுத்து தள்ளுபடி செய்துள்ளது சரிதான் என்றும், வாதிக்கு இந்த மேல்முறையீட்டு வழக்கில் எவ்வித பரிகாரங்களும் கிடைக்ககூடியதல்ல என்றும், இந்த மேல்முறையீட்டு வழக்கை அதிக செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

**12) <u>தீர்வு</u>:–**

மேற்கண்ட தீர்வுக்குரிய இந்த மேல்முறையீட்டு வழக்கில் கண்ட இரு தரப்பு வாதுரைகளையும், சாட்சிகளையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்ததில் தாவா 1ம் இனச் சொத்தானது அருள்மிகு.ரங்கநாத பெருமாள் கோவிலுக்கு சொந்தமானது என்பதும், வாதியின் தாயாரான கோவிந்தம்மாள் என்பவர் பகுதி பாத்திய அனுபவத்திலிருந்து குத்தகைதாரராக இருந்து பகுதி செலுத்தியுள்ளதும், வாதியின் தாயார் ஆயுளுக்கு பிறகு வாதி தாவா 1ம் இனச்சொத்திற்கு பகுதி செலுத்தி வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்துள்ளது உபய வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியத்திலிருந்தும், வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4** வரையிலான ஆவணங்களிலிருந்தும், தாவா 1ம் இனச்சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாக விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது சரிதான் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**13.** மேற்கண்ட தீர்வுக்குரிய இந்த மேல்முறையீட்டு வழக்கில் கண்ட தாவா 2ம் இனச்சொத்தானது அரசுக்கு சொந்தமான புறம்போக்கு மனை பகுதி என உபய வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி

சாட்சியத்திலிருந்தும், பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட **பி.வா.சா.ஆ.2**–ன் படி தாவா 2ம் இனச்சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்டுள்ளது நிரூபணமாகிறது. அரசுக்கு சொந்தமான தாவா 2ம் இனச் சொத்து வாதியின் குடும்ப முன்னோர்கள் காலத்திலிருந்தே வாதி குடும்பத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்துள்ளது என்றும், அதன் பிறகு வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும், சாகுபடியிலும் இருந்து வருவதாக வாதி வா.சா.1 ஆக விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். அந்த சங்கதிகளை நிரூபிக்கும்பொருட்டு வாதி தரப்பில் எவ்வித ஆவணங்களையும் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட **வா.சா.ஆ.3**–ல் அருள்மிகு.ரங்கநாத பெருமாள் கோவில், ஆதிரெங்கம் செயல் அலுவலர் வழங்கிய சான்றிதழில் ஆதிரெங்கம் கிராமத்தில் உள்ள புல எண்.44/7இல் 0.33 செண்ட் நஞ்சை நிலம் ஆதிரெங்கம் ஆற்றாங்கரை தெருவில் வசித்து வரும் திரு.மாரிமுத்து தேவர் மகன் மா.கிருஷ்ணன் என்பவர் பசலி 1428–க்கு மட்டும் குத்தகை அடிப்படையில் நெல் சாகுபடி செய்து வருகிறார் என சான்றிதழ் அளித்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.3–ன் படி தாவா 1ம் இனச்சொத்தை மட்டும் வாதி குத்தகைதாரராக இருந்து சாகுபடி செய்து வருவது நிரூபிக்கப்பட்டுள்ளதாலும், வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ள தாவா 1ம் இனச்சொத்தின் பிரதிவாதிகள் இடையூறு செய்துள்ளதாலும், வழக்கிற்கான வழக்குமூலம் வாதியால் விசாரணை நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் விசாரணை நீதிமன்றம் தாவா 1ம் இனச்சொத்தை பொறுத்து வாதிக்கு, 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது சரிதான் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**14.** மேற்கண்ட தீர்வுக்குரிய இந்த மேல்முறையீட்டு வழக்கில் வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.10–ஐ பரிசீலனை செய்ததில் அருள்மிகு. ரெங்கநாத பெருமாள் கோவில் ஆதிரெங்கம், செயல் அலுவலர் வழங்கிய சான்றிதழில் திருக்கோயிலுக்கு சொந்தமானதும், ஆதிரெங்கம் கிராமம் புல எண்.44/7ல் உள்ள 0.48.00 ஏர்ஸில் 33 செண்ட் நஞ்சை நிலம் மற்றும் திருக்கோயில் அனுபவத்தில் உள்ள புல எண்.44/19ல் 0.03.79 ஏர்ஸ் நத்தம் நிலம் ஆகியவை கிருஷ்ணன் த/பெ.மாரிமுத்து ஆற்றங்கரைத் தெரு ஆதிரெங்கம் என்பவர் சாகுபடியில் இருந்து வருகிறது என சான்றிதழ் அளித்துள்ளார். மேற்கண்ட வா.சா.ஆ.10 ஆவணத்தை நிரூபிக்கும்பொருட்டு வாதி தரப்பில் செயல் அலுவலரை சாட்சியாக விசாரிக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதும், தாவா 2ம் இனச்சொத்தானது அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் என உயப வாதிகள் தரப்பில் ஒப்புகொள்ளப்பட்டுள்ளதும், தாவா 2ம் இனச்சொத்து வாதி அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்பதை வாதி தரப்பில் எவ்வித சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. தாவா 2ம் இனச்சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பதால் அரசு அதிகாரிகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்பதும், தாவா 2ம் இனச்சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதையும், தாவா 1 மற்றும் 2 இனச்சொத்துக்களை சுற்றி கருங்கள் கம்பி வேலி வைத்து பாதுகாத்து வந்தார் என்பதையும், தாவா 1ம் இனச்சொத்திற்கு வடபுறத்தில் உள்ள தாவா 2ம் இனச்சொத்தின் வடக்கு பகுதியில் கருங்கள் கம்பி வேலியை 1 முதல் 4 பிரதிவாதிகளால் சேதப்படுத்தியுள்ளதை தான் சரி செய்ததாகவும், அதற்கு ரூ.25,000/– செலுத்தி மீண்டும் முள் கம்பி வேலியை அமைத்துள்ளார் என வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். அந்த சங்கதிகளை நிரூபிக்கும்பொருட்டு வாதி

தரப்பில் தாவா 2ம் இனச்சொத்துக்களை சுற்றி கருங்கள் கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்ததை நிரூபிக்கும்பொருட்டு எவ்வித சாட்சியங்களையும், ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் தாவா சொத்தில் உள்ள கம்பி வேலியை 1 முதல் 4 பிரதிவாதிகள்_சேதப்படுத்தியதாகவும், அந்த முள் கம்பி வேலியை சரி செய்தது சம்மந்தமாக **வா.சா.ஆ.8**ஆன ரசீது தாக்கல் செய்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.8ஐ பரிசீலனை செய்ததில் மேற்படி ரசீதில் தேதி, வாதி பெயர் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்பதும், தொகை ரூ.15,000/– மட்டும் போடப்பட்டுள்ளது._மேற்கண்ட வா.சா.ஆ.8–ன் படி தாவா 2ம் இனச்சொத்தில் உள்ள வடபுறத்தில் போடப்பட்டிருந்த கருங்கள் கம்பி வேலியை சேதப்படுத்தியதாகவும், அதனால் செலவு செய்யப்பட்டதாகவும் வாதி தரப்பில் கூறும் கூற்று ஏற்கதக்கதல்ல என்றும், உண்மையிலேயே தாவா சொத்துக்கள் முழுவதும் கருங்கள் கம்பி வேலி அமைத்து நிர்வாகம் செய்து வந்திருந்தால் அதை நிரூபிக்கும்பொருட்டு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து அந்த சங்கதிகளை நிரூபித்திருப்பார் என்றும், அவ்வாறு தாவா சொத்துக்களை முழுவதும் சுற்றி கருங்கள் கம்பி வேலி வைக்காததால் தான் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், தாவா 2ம் இனச் சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும், சாகுபடியிலும் இருந்து வருவதாக கூறும் கூற்று ஏற்கதக்கதல்ல என விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளதும், தாவா 2ம் இனச்சொத்தில் வடபுறம் உள்ள கருங்கள் கம்பி வேலியை சேதப்படுத்தியதாகவும், அதற்கு நஷ்ட ஈட்டு தொகை கேட்டுள்ளதும் வாதி தரப்பில் நிரூபிக்கப்படாத நிலையில் வாதிக்கு தாவா 2ம் இனச்சொத்தை பொறுத்தும், இழப்பீடு தொகை பொறுத்தும் எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது சரிதான் என்றும், விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் கண்ட தாவா 2ம் இனச் சொத்து வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து

வருவதையும், சேதம் ஏற்படுத்தியுள்ளதையும் வாதி தரப்பில் நிரூபித்திடாத நிலையில் அந்த பரிகாரங்களை பொறுத்து தள்ளுபடி செய்துள்ளது சரி தான் என விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டு வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் எவ்வித தலையீடும் அவசியம் இல்லை என பிரச்சனை 1 மற்றும் 2–க்கு தீர்வு காணபடுகிறது.

1. இறுதியாக இந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.
2. விசாரணை நீதிமன்றம்/திருத்துறைப்பூண்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.52/2019–ல் கடந்த 29.03.2024–ம் தேதியில் வழங்கிய தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு வாய்மொழியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAVICHANDRAN M
Digitally signed by RAVICHANDRAN M
Date: 2026.05.06 16:42:47 +0530

சார்பு நீதிபதி,
திருத்துறைப்பூண்டி.

நகல் – மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி

RAVICHANDRAN M
Digitally signed by RAVICHANDRAN M
Date: 2026.05.06 16:42:52 +0530

சார்பு நீதிபதி,

திருத்துறைப்பூண்டி.